# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.11 (L.W.23)
# SC.NO.75/2018

Name : பார்த்தசாரதி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.02.2026

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1 மற்றும் 4 எதிரிகள் ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம்: 03.55 P.M.**

சாட்சிக்கு உடல்நிலை சரியில்லாததால் சாட்சி அவரின் வீட்டிலிருந்து கணினி மூலம் நீதிமன்ற ஆணையர் திரு.துக்காராம் உடன் ஆஜரில் நீதிமன்றத்திலுள்ள கணினி வழியாக சாட்சியத்தின் சாட்சியம் விதிமுறைகளின்படி பதிவு செய்யப்படுகிறது.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 21.03.2006 ல் நடந்தது. இந்த வழக்கு கோப்பு என் கைக்கு எப்போது வந்தது என்றால் 21.03.2006 இரவு 09.00 மணிக்கு என்னிடம் வந்தது. சம்பவ இடத்திற்கு போய் நான் என்றைய தேதியில் விசாரித்தேன் என்றால் 22.03.2006 அன்று காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். என்னுடன் அப்போது சம்பவ இடத்திற்கு யார் யார் வந்தது என்றால் டிரைவர், சாட்சி ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் என்னுடன் வந்தார்கள்.

சாட்சி ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்களை எங்கிருந்து நான் அழைத்து சென்றேன் என்றால் சாட்சிகளை நான் வரச்சொன்னதின் பெயரில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மேற்கண்ட சாட்சிகள் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 06.00 மணிக்கு வந்தார்கள். மேற்கண்ட சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சிவநாதபுரத்தை சேர்ந்தவர்கள்.

சம்பவம் நடந்தததாக சொல்லப்படும் பகுதி எந்த காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் விரிஞ்சிபுரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது.

நான் விசாரணைக்கு சென்றபோது விரிஞ்சிபுரம் காவல் நிலைய ஆய்வாளரையோ அல்லது உதவி ஆய்வாளரையோ உடன் அழைத்து சென்றேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி எந்த வனச்சரகத்திற்கு உட்பட்டது என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் நான் எவ்வளவு நேரம் விசாரணை செய்தேன் என்றால் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் விசாரணை செய்தேன். விசாரணை முடித்து மீண்டும் எத்தனை மணிக்கு எங்கள் காவல் நிலையம் சென்றேன் என்றால் விசாரணை முடித்து பாகாயம் காவல் நிலையம் சென்றேன்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல கைப்பற்றியிருக்கிறேன். என்ன பொருட்களை கைப்பறினேன் என்றால் கத்தி, இரத்தம் தோய்ந்த மண், இரத்தம் தோயாத மண் மற்றும் கருங்கற்கள் ஆகியவற்றை கைப்பற்றினேன். அந்த கருங்கற்கள் எந்த வடிவத்தில் இருந்தது என்று எனக்கு நினைவில்லை. மேற்சொன்ன பொருட்களை தவிர்த்து வேறு எந்த பொருளையும் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

மேற்சொன்ன சாட்சிகளை பாகாயம் காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தேன் என்றால் காவல் நிலையம் மற்றும் மருத்துவமனையில் வைத்து சாடசிகளை விசாரித்தேன். அடிப்படாமல் இருந்த சாட்சிகளை பாகாயம் காவல் நிலையத்திலும், அடிப்பட்ட சாட்சிகள் சீனிவாசன், டிஎஸ்பி சரவணன் ஆகியோர்களை மருத்துவமனையில் வைத்து விசாரித்தேன்.

விசாரித்து பதிவு செய்த வாக்குமூலங்களை நான் சொல்ல சொல்ல பாகாயம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர்கள் பதிவு செய்தார்கள்.

அந்த உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர்களின் பெயர்கள் தற்போது எனக்கு நினைவிருக்கிறதா என்றால் ஆய்வாளர் பெயர் கோபால் என்பது நினைவிருக்கிறது மற்றவர்கள் பெயர் நினைவில்லை. ஆய்வாளர் கோபால் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் அவர் பெயரை தவிர்த்து மற்றவர்களின் பெயர்கள் எனக்கு நினைவில்லை.

ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமை காவலர்கள் பதிவு செய்த வாக்குமூலங்களை யார் யார் யார் யாரின் வாக்குமூலங்களை பதிவு செய்தார்கள் என்றால் தற்போது நினைவில்லை. பாகாயம் காவல் நிலையம் அமைந்துள்ள பகுதி மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான். பாகாயம் காவல் நிலையத்தில் சாராயத்தை அழித்ததாக சொல்லியிருக்கிறேன் என்றும் அழித்தல் மகசரில் வேறு எந்த பொதுமக்களையாது சாட்சியமாக சேர்த்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிரிகளை கைது செய்யும்போதும் அந்த பகுதியியல் உள்ள பொதுமக்களை சாட்சியமாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

இரண்டு நாட்டு துப்பாக்கிகளை ஆர்டிஓ முன்னிலையில் பையர் செய்தோமா என்றால் ஏற்கனவே ஒரு துப்பாக்கி ஒரு எதிரி பையர் செய்துவிட்டார், நீளமான ஒரு துப்பாக்கியைதான் நாங்கள் ஆர்டிஓ முன்னிலையில் பையர் செய்தோம். எதிரி பையர் செய்ததாக சொல்லப்படும் துப்பாக்கியை எதிரிதான் பையர் செய்தார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது சாட்சிகள் மூலம் தெரிய வந்தது. எந்த சாட்சிகள் மூலம் தெரிய வந்தது என்றால் எல்லா சாட்சிகளையும் விசாரித்தபோது தெரிய வந்தது.

3 எதிரிகளையும் எந்த தேதியில் எத்தனை மணிக்கு நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன் என்றால் 23.01.2006 அன்று எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய பொருட்களை தடய அறிவியல் துறைக்கு எந்த தேதியில் எப்போது அனுப்பினேன் என்றால் நீதிமன்றம் மூலமாக

அனுப்பினேன் தேதி கவனம் இல்லை. மேற்கண்ட பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்று தேதி நினைவில்லை.

மேற்சொன்ன சான்று பொருட்கள் அனைத்தும் வெளி மார்க்கட்டில் கிடைக்கும் பொருட்கள் என்றால் சரியல்ல. நாட்டு துப்பாக்கி என்பதால் யாருடைய துப்பாக்கி என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பான வகையில் உரிமம்இல்லாமல் வைத்திருந்த துப்பாக்கி ஆகும். உரிமம் இல்லாததால் யாருடைய துப்பாக்கி என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால சரியல்ல. அது எதிரி கையில் வைத்திருந்த துப்பாக்கி ஆகும்.

உரிமம் இல்லாததால் அது யாருடைய துப்பாக்கி என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. துப்பாக்கியை எதிரி வசம் வைத்திருந்ததால் அது அவருடையதுதான் என்று சாட்சி சொல்கிறார். எதிரி துப்பாக்கி வைத்திருந்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. துப்பாக்கிகள் மற்றும் சாராயத்தை முதன்முதலில் நான் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் பாகாயம் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன்.

வழக்கு சொத்துக்களை எந்த தேதியில் எத்தனை மணிக்கு யார் பாகாயம் காவல் நிலையத்தில் வைத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த பொருட்களை எப்படி எடுத்து வந்தார்கள், எதில் எடுத்து வந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. இது தவிர்த்து இந்த வழக்கு சம்பந்தமாக நான் வேறு எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

புள்ளி விவர கணக்கிற்காக டிஎஸ்பி சரவணன் அவர்கள் குழு சாராய வேட்டைக்கு சென்றார்கள் என்றும், அங்கு தக்க அனுமதியின்றி காட்டு பகுதியில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த மலை வாழ் மக்களை பார்த்து டிஎஸ்பி சரவணன் சுட்டுள்ளார் என்றும் அதில் எதிரி மணியின் காலில் துப்பாக்கி குண்டு பாய்ந்தது என்றாலும், அந்த வழக்கு டிஎஸ்பி சரவணன் மற்றும் அவரின் குழு மீது போட்டுவிடுவார்கள் என்று அந்த வழக்கிலிருந்து தப்பிக்க அப்பாவிகளான ஆஜர் எதிரிகள் சாராயம் விற்றுக்கொண்டிருந்ததாகவும், நாட்டு துப்பாக்கியால்

சுட்டதாகவும் கத்தி, கல் கொண்டு தாக்கியதாகவும், நான் டிஎஸ்பிக்கு சாதகமாக அவர் கேட்டுக்கொண்டதின் பெயரில் ஆஜர் எதிரிகள் மீது பொய்யான வழக்கு போட்டு அவர்கள் அனைவரும் எங்கள் துறையை சார்ந்தவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் உள்ள சான்று பொருட்கள் சான்று ஆவணங்கள் அனைத்தும் என்னால் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் பொதுமக்களை யாரையும் சாட்சியமாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் என்னுடைய மேல் அதிகாரியின் உத்தரவால் இந்த வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்று சொல்லியுள்ள நிலையில் அந்த எழுத்து மூலமான உத்தரவு எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்மொழி உத்தரவு அதனால் எதையும் தாக்கல் செய்யவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் மாவட்ட குற்ற ஆவணக்காப்பகத்தில் டிஎஸ்பியாக இருந்தேன்.

என் அலுவலகத்திலிருந்து அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 12 கி.மீ தொலைவு இருக்கும். 21.03.2006 அன்று இரவு 09.00 மணிக்கு மேல் இடத்திலிருந்து உத்தரவு வந்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் அன்று இரவு 09.00 மணிக்கு அடுக்கம்பாறை மருத்துவமனையில் சாட்சிகள் டிஎஸ்பி சரவணன், தாவாதாரர் மற்றும் சீனிவாசன், உதவி ஆய்வாளர், ஆயுதப்படை அந்தோணிராஜா, சிவாஜி, குமார், சத்திய நாராயணன், தனஞ்செழியன், ராஜா மூர்த்தி, ஜகன்நாதன், குகன், இளங்கோவன், புகழ் (உதவி ஆய்வாளர்), ஹரிதாஸ், காசி ஆகியவர்களை விசாரித்ததாக என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம்.

வழக்கிற்காக மேல் அதிகாரியின் உத்தரவு வந்ததாக சொல்லப்படும் அதே நேரத்தில் சாட்சிகளை விசாரித்ததாக சொல்வது வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய் என்றால் சரியல்ல. போன் மூலம் சொல்லிவிட்டார்கள். நான் போய் விசாரணை செய்தேன். மேல் அதிகாரியின் அழுத்தத்தால்தான் விசாரிக்காத சாட்சிகளை விசாரித்ததாகவும், நடக்காத சம்பவத்தை நடந்தாகவும் ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பார்வை மகசரில் வடக்கில் குணசேகரன் என்பவரின் நிலமும் அந்த நிலத்தில் நெற்பயிர் நடப்பட்டுள்ளது என்றும், கிணறு ஒன்று உள்ளது என்றும் அதை தொடர்ந்து சடயன் என்பவரின் கொட்டகையும் அதை தொடர்ந்து வடக்கே குணசேகரன் என்பவரின் வீடும் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் நான் குணசேகரனை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

முதல் விசாரணையில் 22.03.2006 அன்று காலை 07.00 மணிக்கு மகசரில் அதே சாடசிகள் முன்னிலையில் கற்களை மகசர் மூலம் கைப்பற்றினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கில் நான் விசாரித்ததாக சொல்லப்படும் எந்த சாட்சிகளும் கருங்கற்களால் தாக்கப்பட்டதாவோ, காயம்பட்டதாகவோ, மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவோ கூறவில்லை என்றால் கற்களை வீசியபோது தப்பிவிட்டதாக சாட்சிகள் சொல்லியுள்ளார்கள். கற்களால் வீசியபோது தப்பித்துவிட்டதாக எந்த ஒரு சாட்சியும் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இது வழக்கிற்காக சொல்லப்படும் பொய் என்றால் சரியல்ல.

வழக்கு ஆவணங்களில் எந்த இடத்திலும் அடிப்பட்டதாவோ, காயம்பட்டதாவோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் (அ.த.சா.ஆ.9)ல் என் முன்புதான் சாட்சிகள் கையொப்பம் போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னால் அந்த சாட்சிகளின்

கையொப்பம்தான் அது என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரியல்ல என் முன்னிலையில்தான் அவர்கள் கையொப்பம் செய்தார்கள். பார்வை மகசர் வழக்கிற்காக நாங்களாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

வழக்கிற்காக தயாரித்து தாக்கல் செய்துள்ள மகசர்களில் உள்ள சாட்சிகளின் கையொப்பங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டுள்ளது என்றாலும் எனவே அது வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்று தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் உட்பட அனைத்து மகசர்களும் எங்களால் தயாரிக்கப்பட்டு சாட்சிகளின் கையொப்பங்களும் எங்களால் தயாரிக்கப்பட்டது என்றாலும் நான் சொல்வது போல் சாட்சிகள் யாரும் கையொப்பமிடவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், 4 ம் எதிரி இந்த வழக்கில் சம்பந்தம் இல்லாத நிரபராதி என்றும், மேல் அதிகாரியின் அழுத்தத்தினால் இன்னொரு நபர் தேவைப்படுவதால் 4 வது எதிரியை இந்த வழக்கில் தவறுதலாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:05.10 P.M.**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2026.02.05 19:06:59 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்